## பாரத் கல்விக் குழுமம்

- பாரத் அறிவியல் நிர்வாகவியல் கல்லூரி
- இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் கேட்டரிங் டெக்னாலஜி & ஹோட்டல் மேனேஜ்மென்ட்
- இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் கேட்டரிங் டெக்னாலஜி & ஹோட்டல் மேனேஜ்மென்ட் (கோயம்புத்தூர்)
- பாரத் மேலாண்மையியல் கல்லூரி
- பாரத் ஆசிரியர் பயிற்சி நிறுவனம்
- பாரத் கல்வியியல் கல்லூரி
- நவீனா மேல்நிலைப் பள்ளி, திருவோணம்

மண்ணில் விதைக்கின்ற அனைத்தும்
உரமாகி போவதுபோல்
பெண்ணில் விதைக்கின்ற எண்ணங்களும்
உரமாகிப் போகும்
மண்ணும், பெண்ணும் ஒன்று
எல்லாவற்றையும் தக்கவைத்துக் கொள்ளும்
பெண்ணின் கல்வி!
மண்ணின் வேள்வி!!

- திருமதி **புனிதா கணேசன்**




பெண் ஒரு சுயம்பு
(பெண்ணின் பெருந்தக்க யாவுள)

# பெண் ஒரு சுயம்பு

(பெண்ணின் பெருந்தக்க யாவுள)



தொகுப்பாசிரியர்:
முனைவர் க.மகேஸ்வரி

**பாரத் மகளிர் மன்றம்**
பாரத் அறிவியல் நிர்வாகவியல் கல்லூரி
தஞ்சாவூர்-5

# பெண் ஒரு சுயம்பு

(பெண்ணின் பெருந்தக்க யாவுள)


கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் &

தொகுப்பாசிரியர் :

**முனைவர் க. மகேஸ்வரி**

கருத்தரங்க செயற்குழு உறுப்பினர்கள் :

**முனைவர் ப. கவிதா**

**முனைவர் பெ. கவிதா**

**பேரா. ப. நல்லநாயகி**

**பேரா. ஹ. பாமா**

**பேரா. வி. ராஜலெட்சுமி**

**திருமதி ந. கவிதா**


**ஆய்வுக்கோவை**


**பாரத் மகளிர் மன்றம்**

**பாரத் அறிவியல் நிர்வாகவியல் கல்லூரி**

புதிய பேருந்து நிலையம் அருகில், தஞ்சாவூர்-5.

# நூல் விவரக் குறிப்பு


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | **பெண் ஒரு சுயம்பு** |
| ஆசிரியர் | : | தொகுப்பு நூல், பாரத் மகளிர் மன்றம் |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு ஆண்டு | : | 2017 |
| உரிமை | : | பாரத் கல்லூரியின் பாரத் தமிழ் மன்றத்திற்கு |
| தாளின் தன்மை | : | 18.6 |
| நூலின் அளவு | : | 1x8 |
| எழுத்தின் அளவு | : | 12 புள்ளி |
| மொத்த பக்கங்கள் | : | xx + 588 |
| நூலின் விலை | : | ரூ. 350/- |
| ISBN No. | : | 978-93-85283-28-4 |

ISBN 978-93-85283-28-4

9 789385 283284

வெளியீடு : **இயல் வெளியீடு**
23B/2739, டிபிஎஸ், பில்டிங்,
தொப்புள் பிள்ளையார் கோயில் தெரு,
தெற்கலங்கம், தஞ்சாவூர்-613 001.

அச்சாக்கம் : **திருவள்ளுவர் ஆப்செட் பிரிண்டர்ஸ்**
141, ஜே.டி. காம்ப்ளக்ஸ்,
ஈஸ்வரி நகர், மெடிக்கல் காலேஜ் ரோடு,
தஞ்சாவூர்-7.
போன் : 98424 91204

அட்டை வடிவமைப்பு: **திரு இரா. செம்பியன்**
காட்சித் தொடர்பியல் துறை, பாரத் கல்லூரி.





**முனைவர் க.பாஸ்கரன்**
துணைவேந்தர்

**தமிழ்ப் பல்கலைக்கழகம்**
தஞ்சாவூர்-613010 தமிழ்நாடு, இந்தியா
அலுவலகம் : 04362-227040
இல்லம் : 04362-226741
நிகரி : 04362 226159

மின் அஞ்சல்: rg.bhaskaran@gmail.com
இணையதளம் : www.tamiluniversity.ac.in


## வாழ்த்துரை

பாரத் அறிவியல் நிர்வாகவியல் கல்லூரியில் பாரத் மகளிர் மன்றத்தின் சார்பில் மாநிலம் தழுவிய மகளிர் மாநாடு நடைபெறவுள்ளதை அறிந்து பெரிதும் மகிழ்ந்தேன். பெண்ணால் சாதித்துக் குவிக்கமுடியும் என்பதன் அடையாளமே பாரத் கல்லூரிதான். திருமதி புனிதா கணேசனின் ஆற்றல்மிகு ஆளுமையால் கல்லூரி நாளொரு பொழுதும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தோங்கி வருகிறது. அதோடு நின்றுவிடாமல் அவருடைய படைப்புலகம் அலாதியானது. அவர் எழுத்துக்கள் பெண்ணியத்தின் பிரதிநிதிகளாக நின்று ஒடுக்கப்பட்ட பெண்களுக்கான விடுதலையைத் தேடித்தருபவை.

இம்மகளிர் மாநாட்டையொட்டி பெண் ஒரு சுயம்பு எனும் பொருண்மையில் கருத்தரங்கம் நடைபெறுவதும் அவ்வாய்வுரைகள் அதே நாளில் நூல் வடிவம் பெறுவதும் மகிழ்வான செய்திகள். இந்த ஆய்வுமலரில் இடம்பெற்றுள்ள கட்டுரைகள் அனைத்தும் பெண்குலத்தை மேம்படுத்தும் உயரிய சிந்தனைகளை முன்வைக்கின்றன.

ஒரு பெண் பொருளாதார விடுதலை பெற்றால்தான் தன்னுடைய சிந்தனைகளை அச்சமில்லாமல் வெளிப்படுத்தவும் செயல்படுத்தவும் முடியும் என்பதைப் பல ஆய்வுக்கட்டுரைகள் தீர்மானமாகச் சொல்லி முடிக்கின்றன. பொருளாதாரத் தேவையைக் கருத்தில்கொண்டு பணிக்குச் செல்லும் பெண்கள் எதிர்கொள்ளும் சிக்கல்களைப் பல கட்டுரைகள் பேசுகின்றன. பெண தனக்கான உரிமையைத் தானே போராடிப் பெறவேண்டும். பெண்களுக்கு உரிமைகள் பிறர் தருவதாக இருக்கக்கூடாது. அவர்களாக எடுத்துக் கொள்வதாகவும் அந்த உரிமைகளால் தங்களை வளர்த்துக் கொள்வதாகவும் இருக்க வேண்டும். கல்விக்கு, வாழ்க்கைக்கு, பொருளுக்கு, ஆதரவுக்கு என எல்லாவற்றுக்குமே ஆண்களை நம்பிடும் நிலை மாறவேண்டும் என்பதைப் பல கட்டுரையாளர்கள் வலியுறுத்தியுள்ளமை மிகச் சரியான பார்வையாகும்.

இன்று பெண்கள் அனைத்துத் துறைகளிலும் காலூன்றித் தங்கள் ஆற்றலைக் காட்டி வருகின்றனர்; சில துறைகளில் ஆண்களைக் காட்டிலும் தாங்கள் வல்லமை வாய்ந்தவர்கள் என்றும் புதிய தடம் பதித்து வருகின்றனர். இத்தகைய சூழலில் இது போன்ற ஆய்வுக்கோவை பெண் இன்னும் ஒருபடி மேலெழ வழிசமைக்கும் என்பதில் ஐயமில்லை.

வாழ்த்துக்களுடன்...

24/9/17

**முனைவர் க.பாஸ்கரன்**

BHARATH COLLEGE OF SCIENCE AND MANAGEMENT
(Affiliated to Bharathidasan University)
•Sponsored by K. Nadimuthu Memorial Educational Trust•
Bharath Avenue, Near New Bus Stand, THANJAVUR- 613 005, Tamil Nadu, S.India.
Off: 04362 - 227937, 228081, Fax : 04362 - 227185, E-Mail : bharathcollege@gmail.com

Mrs. PUNITHA GANESAN, M.A.,
Secretary

# வாழ்த்துரை

"சுயம்பு" என்பது, மற்றவர்களின் எந்தவித முயற்சியும் இல்லாமல் தானாக பூமியிலே வேரூன்றி அல்லது தடம் பதித்து உருவாகின்ற நிலையே ஆகும். அந்த வகையில், பெண் என்னும் ஜீவராசி தானாக முயற்சி செய்து வாழ்வியல் முன்னேற்றத்தை அடைந்து, தானும் உயர்ந்து, தன்னை சார்ந்தவர்களையும் காக்கின்ற அரணாக விளங்குகின்றாள். உலகப் படைப்புகளில் உருவாக்கம் செய்கின்ற, உற்பத்தி செய்கின்ற தலைமுறைகளை உருவாக்குகின்ற அத்துணை உயிரினங்களின் சிறந்த அடையாளமாக பெண் திகழ்கிறாள்.

நம்முடைய சமூகம் தாய்வழி சமூகமாக உருவானதாக வரலாறுகள் சொல்கின்றன. அந்த தாய்மொழி சமூகம் காதல், வீரம், அன்பு, கொடை என பல நிலைகளை இந்த சமுதாயத்திற்கு உருவாக்கித் தந்திருக்கிறது. அப்படியென்றால், நம்நாகரிகம், பண்பாடு, கலாச்சாரம் இவையனைத்தும் பெண்களின் வாழ்வியல் கல்வி சார்ந்து அமைந்திருக்கிறது.

இந்த ஆய்வுக்கோவையில் எழுத்துக்களை பதிவு செய்திருக்கின்ற ஒவ்வொரு கட்டுரையாளர்களுமே தன்னுடைய அனுபவத்தையோ தான் சார்ந்து வாழ்ந்த பெண்களின் அனுபவத்தையோ பதிவு செய்திருப்பது சிறப்பிற்குரிய செய்தியாகும். பெண்கள் சமூகத்தில் எதிர்கொள்கின்ற அத்தனை செயல்களின் நிலையுமே ஒரு அனுபவமாக பதிவுச் செய்தால் வாழும் சமூகத்திற்கு ஒரு பெரிய பாடமாக இருக்கும். ஆனால் அப்படி யாரும் துணிச்சலாக பதிவு செய்வதில்லை. பெண்களின் பிரச்சனையைப் பேசும்போது தீர்வாக முடிந்தால் அது நலம் பயக்கும். ஆனால், பிரச்சனையின் தீர்வே, பெரும் பிரச்சனையாக இருக்கும் சூழலில் பெண் எதனை வெளிப்படுத்துவாள். அதனால் அவள் பெரும்பாலும் பிரச்சனைகளை வெளிப்படுத்த தயங்குகின்ற ஒரு சூழல் உருவாகின்றது. பெண் விடுதலையைப் பேசிய அத்துனைப் பேரும் ஆண் என்கின்ற ஓர்



அடையாளத்தோடு வாழ்கின்றனர். பெண்ணுக்குரிய விடுதலை என்பது, அது ஆணையும் சார்ந்திருக்கிறது என்பதை பொதுவாக புரிந்துகொள்ள வேண்டும். தர்க்க ரீதியாக, உடல் ரீதியாக, பண்பாட்டு ரீதியாக, அரசியல் ரீதியாக பெண் ஒரு வரைமுறைக்குள் உட்படுத்தப்படுகிறாள். இவற்றைக் கடந்து ஒரு வரைமுறையற்ற நிலை என்று நாம் சொல்ல முடியாது. இவையெல்லாம் ஒரு பண்பாட்டு கருத்தாக திணிக்கப்படும்போது தன்னை ஒரு சுயமரியாதையோடு கருத வேண்டும் என்ற நிலையில் அந்த பெண் எழுதவோ, பேசவோ மறுக்கின்றாள். சுயமரியாதை என்பது என்ன என்பதை பெண்களுக்கு நாம் கற்றுக் கொடுப்பதில்லை. சுயமரியாதை என்பது யாரையும் பாதிப்பது கிடையாது. ஆனால், சுயமரியாதை என்பது மான அவமான பிரச்சனைகளாக கருதப்படும் போது அந்த பெண் தன்னை இழிவுப்படுத்திக் கொண்டு, இந்த சமூகத்தில் தான் வாழ தகுதியற்றவள் என்று தன்னை நினைத்துக்கொண்டு அவள் மாய்ந்துவிடுகிறாள்.

பெண் விடுதலை என்பது பண்பாட்டு ரீதியாக ஆண்களின் எண்ணத்தை உள்ளடக்கி இருக்கிறது. பெண் விடுதலையை எழுதியவர்கள், பேசியவர்கள் அனைவரும் ஆண் மக்கள். நாம் உதாரணம் சொல்லும்போது இந்த பெண், பெண் விடுதலைக் குறித்து எழுதினார் என்று சொல்வதற்கு எந்த வரலாறுகளும் இல்லை. வரலாற்றிலும் பெண் விடுதலைப் பேசிய பெண்களின் பெயர்கள் பதிவு செய்யப்படவில்லை. அப்படி பேசப்பட்டிருந்தாலும் அவை கதையாகவும், நாவல்களாகவும், புதினமாகவும்தான் பேசப்பட்டுள்ளது. அது என்ன காரணம் என்பதை இன்றுவரையிலும், பெண் விடுதலை அடைந்துவிட்டோம் என்று பெண் விடுதலைப் பேசும் பெண்களுக்குக் கூட தெரிவதில்லை. பெண் விடுதலை அடைந்துவிட்டோம் என்பதையும் நாம் உணரவில்லை. இந்த கட்டுரைகள் வாயிலாக நாம் சில செய்திகளை புரிந்து கொள்ள முடியும். நமது பெண் கல்விமுறை என்பது அறிவு சார்ந்த செய்திகளை, அறிவு சார்ந்த செயல்பாடுகளை, அறிவு சார்ந்த உயர்வுகளை நமக்கு தந்து கொண்டிருந்தாலும், சமூகம் சார்ந்த வாழ்வியல் என்று வரும்போது அவள் எதிர்மறையாக, கீழ்நிலை மதிப்பெண்ணை எடுக்கக்கூடிய நிலையில்தான் இருக்கின்றாள். இதனை நாம் சிந்தித்து பார்க்க வேண்டும். பெண் கல்வி என்பது ஊதியத்திற்கான கல்வியாக இந்த சமூகத்தில் எண்ணப்படுகிறது. மற்றவர்கள் சொல்வதைப் போல ஒரு பெண், சமூகம் சார்ந்த கல்வியை பயில முடியாமல்

இருப்பதற்கு என்ன காரணம் என்று சொன்னால் அவளுக்கு பயணங்கள் மறுக்கப்படுகிறது. பொருளாதார சுதந்திரம் மறுக்கப்படுகிறது. தன்னிச்சையாக முடிவுகள் எடுக்க முடியாமல், யாரையாவது சார்ந்து வாழவேண்டிய பண்பாட்டு ரீதியானக் கருத்துகளை, இந்த சமுதாயம் திணித்து வைத்திருக்கிறது. பொருளாதார ரீதியில் ஒரு பெண் சுயமாக முடிவெடுக்கும் நிலையில்தான் அவள் ஒரு சுயம்புவாக இருக்கமுடியும். இதனை, இந்த சமூகம் நமக்கு கற்றுக்கொடுக்க மறுக்கிறது. பெண் தெளிவுப் பெற்றால், எங்கே நமக்கு பணிவிடைகள் செய்ய மறுத்துவிடுவாளோ? எங்கே நம்மைவிட்டு விலகிவிடுவாளோ? அல்லது தன்னை நேசிக்காமல் போய்விடுவாளோ? என்ற மானசீகமான கருத்தை உள்வாங்கிக் கொண்டிருக்கின்ற ஆண் சமூகம் அவளை ஒரு சுயம்புவாக மாறவிடுவது கிடையாது.

பெண் ஒரு சுயம்புவாக இருக்கும் பட்சத்தில் அவள் ஒரு ஆலமரம் போன்று நிச்சயமாக இருப்பாள். ஆலமரம் கிளைகள், தழைகள், விழுதுகள் என தழைத்து பல பலன்களைக் கொடுப்பது போல், சுயம்புவாகிய பெண் விஸ்வரூபம் எடுக்கும்பொழுது சமூகத்திற்கு நிழல் தரக்கூடிய, சமூகத்திற்கு பயன்தரக்கூடிய ஒரு வாழ்க்கையை வாழ அவள் கற்றுக்கொடுப்பாள். கடுகினும் சிறிய விதையில் பெரிய ஆலமரம் ஒளிந்திருப்பதுபோல பெண்களின் சிறிய சிறிய சிந்தனையில் பெரிய பெரிய உருமாற்றங்கள் ஏற்படுகின்றன.

இந்த சமூகத்தில், இரண்டு இயல்கள் நம்மை ஆட்சி செய்துகொண்டிருக்கின்றன. ஒன்று அரசியல், மற்றொன்று அறிவியல். அரசியலையும் அறிவியலையும் பெண்கள் சரியாக கற்றுக்கொண்டோமேயானால் யாராலும் தவிர்க்க முடியாத ஒரு இடத்திற்கு ஒரு பெண் செல்வாள். ஆனால் இந்த இரண்டு இயல்களும் பெண்களுக்கு மறுக்கப்படுகின்றன. அரசியலில் இன்னும் பெண்களுக்கான இட ஒதுக்கீடு 33 சதவீதத்திலேயே இருக்கிறது. அறிவியலில் பெண்கள் முன்னுக்கு வந்துவிடுவோம் என்று சொன்னால் இல்வாழ்க்கை பாதிக்கப்படுகிறது. இந்த இரண்டு காரணங்களின் அடிப்படையில் இந்த இரண்டு இயல்களும் கற்றுக்கொள்ளவில்லை அல்லது கற்றுக்கொடுக்கப்படவில்லை என்கின்ற ரீதியில் இந்த பெண் சமுதாயம் இருக்கின்றது.



பெண் ஒரு சுயம்பு என்ற இந்த ஆய்வுக்கோவை பெண்மையை புகழக்கூடிய வார்த்தைகளாக மட்டுமல்லாமல் இதிலுள்ளக் கட்டுரைகள் அனைத்தும் ஒரு பெண் சுயம்புவாக இருந்தால் பண்பாட்டு ரீதியில் என்னென்ன சாதிக்க முடியும் என்பதை அறிவுறுத்துகிறது. பெண் சுயம்புவாக இருக்கும் ஒவ்வொரு இடத்திலும் அவள் ஒரு இந்திராகாந்தியாகவோ அன்னை தெரசாவாகவோ, மார்கரெட் தாட்சராகவோ இன்று வரலாற்றில் பதிவு செய்யப்படுவார்கள். சுயம்புவாக இருக்கக்கூடிய பெண் சமூகத்தை நாம் தாய்வழி சமூகம் என்று சொல்ல, ஒவ்வொரு ஆண் மகனும் தன்னைப் பெற்ற தாய்க்குக் கொடுக்கும் மரியாதையை தான் மணந்துகொண்ட மனைவிக்கும் கொடுக்கவேண்டும். தான் பெற்ற பிள்ளை, தன்னுடன் பிறந்த சகோதரி எல்லோருமே தாய்வழி சமூகம்தான் என்பதை உணரவேண்டும். இவர்கள் அனைவரும் ஏதாவது ஒரு குழந்தைக்கு தாயாகத்தான் இருக்க முடியும். பண்பாட்டு அடிப்படையில், தான் மணந்து கொண்ட மனைவியைத் தவிர பிற பெண்கள் எல்லோரையும் தாயாக மதிப்பது தாய்வழி சமூகம். இத்தகைய தாய்வழி சமூகத்தைப் போற்றுவது நம் தமிழ் சமூகம் மட்டும்தான். ஒவ்வொரு பெண்ணையும் சுயம்புவாக செயல்பட விட்டோமானால் இரும்புபோல உறுதியை அவர்கள் பெறுவர் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

பெண் ஒரு சுயம்பு என்ற தலைப்பிலான மாநிலம் தழுவிய மாநாடு மற்றும் கருத்தரங்கை நிகழ்த்துவதில் பாரத் மகளிர் மன்றம் பெருமை கொள்கிறது. இந்நிகழ்வின் கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் முனைவர் க.மகேஸ்வரி, உறுப்பினர்கள் முனைவர் ப.கவிதா, முனைவர் பெ.கவிதா, பேரா.ப.நல்லநாயகி, பேரா.பாமா, பேரா.வி.ராஜலெட்சுமி, திருமதி ந.கவிதா மற்றும் பாரத் மகளிர் மன்றத்தின் முன்னாள் இந்நாள் தலைவிகள் செயலாளர்கள் பொறுப்பாளர்கள் உள்ளிட்டவர்களுக்கும் மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் ஆய்வுக்கோவைக்கு கட்டுரை வழங்கிய கட்டுரையாளர்கள் அனைவருக்கும் என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். பெண் ஒரு சுயம்புதான் என்ற இந்த நிகழ்வும் நாளை வரலாற்றில் இடம்பெறும் என்பதில் ஐயமில்லை.

அன்புடன்

(புனிதா கணேசன்)

இம்மன்றம் சமுதாயத்தில் ஒடுக்கப்பட்ட பெண்களை, இனம் கண்டு அவர்களுக்கு உரிய முறையில் தேவையான உதவிகளையும், ஆலோசனைகளையும் வேலைவாய்ப்புகளையும் ஏற்படுத்திக் கொடுத்து வாழ்க்கையில் பெண்கள் தங்களது சொந்த முயற்சியில் முன்னேற்றம் அடைய வேண்டும் என்பதையே குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டுவருகிறது. இவ்வாண்டு மகளிர் தினத்தை முன்னிட்டு மார்ச் மாதம் மூன்றாம் தேதி பாரத் கல்விக் குழுமத்தின் ஓர் அங்கமாகிய பாரத் மகளிர் மன்றம் நடத்தும் பெண் ஒரு சுயம்பு என்னும் மாநிலம் தழுவிய மகளிர் மாநாடு சிறப்பாக நடைபெற உள்ளது.

பெண் ஒரு சுயம்பு என்னும் தலைப்பிலான இம்மாநாட்டு கருத்தரங்க ஆய்வுக்கோவைக்கு சிறப்பானதொரு வாழ்த்துரை வழங்கிய தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் மாண்பமை துணைவேந்தர் முனைவர் க.பாஸ்கரன் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். இம்மாநாட்டை நடத்த வேண்டும் என்றும் அதற்கான கருந்தரங்கம் கட்டுரையோடு நடக்க வேண்டும் என்றும், எங்களை உற்சாகப்படுத்தி செயல்பட வைத்த எங்கள் பாரத் மகளிர் மன்ற நிறுவனர் திருமதி புனிதா கணேசன் அம்மா அவர்களுக்கு, இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆய்வுக்கோவை சிறப்பாக வெளிவர காரணமாக இருந்த பாரத் கல்லூரியின் முதல்வர் முனைவர் த. வீராசாமி அவர்களுக்கும், பிழைகளைத் திருத்திக் கொடுத்த நல்லாசிரியர் கந்தசாமி ஐயா அவர்களுக்கும், தமிழ்த்துறையின் தலைவர் முனைவர் த. வீரையன் அவர்களுக்கும், அட்டைப்படம் வடிவமைத்துக் கொடுத்த திரு இரா. செம்பியன் அவர்களுக்கும், சிறந்த முறையில் தட்டச்சு செய்துக் கொடுத்த திருவள்ளுவர் ஆப்செட் நிறுவனத்தாருக்கும், இயல் பதிப்பகத்தாருக்கும் என் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். பாரத் மகளிர் மன்றத் தலைவர்கள், செயலாளர்கள், உறுப்பினர்களுக்கும், கட்டுரை வழங்கிய பேராசிரியர்கள், மாணவர்கள், பெண்ணிய ஆர்வலர்களுக்கும் என் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்ஙனம்

**முனைவர் க.மகேஸ்வரி**

தொகுப்பாசிரியர்,

கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர்



## பொருளடக்கம்


1. பெண் கடந்து வந்த பாதை – 1
அ. அசோக்குமார்

2. பெண்ணின் நிலை அன்றும் இன்றும் – 5
ச. அபிநயா

3. வாழ நினைத்தால் வாழலாம் – 9
க.அம்பிகை

4. பெண்ணே பெண்ணுக்கு எதிரி ஒரு சமூகப் பார்வை – 13
முனைவர் பா.அமுதசித்ரா

5. உழைக்கும் பெண்களின் இன்றைய நிலை – 18
க. அருணாதேவி

6. பெண் மாற்றுத்திறனாளிகள் எதிர்கொள்ளும் சவால்கள் – 21
மு.அருள்மொழி

7. காலந்தோறும் பெண்கள் – 25
எஸ். அனிதா

8. பெண் கடந்து வந்த பாதை – 28
திருமதி. ஜா.ஆக்னஸ் மெட்டில்டா

9. வாழ நினைத்தால் வாழலாம் – 31
அ. ஆரோக்கிய மேக்ஸிலின்

10. பெண்பாற் புலவர் ஔவையார் – 35
சூரியபிரியா ர. ஆசைத்தம்பி

11. வாழ நினைத்தால் வாழலாம் – 40
மருத்துவர்.கோ. ஆனந்தி

12. எங்கெங்கு காணினும் சக்தியடா – 45
முனைவர் இரா. இராசாமணி

13. பாரதி அறிந்த புதுமைப் பெண் – 48
சீ.இராணி

14. பெண் கடந்து வந்த பாதையில்: கற்பு – 52
பேரா.அ.இராதாகிருஷ்ணன்

15. பணிக்குச் செல்லும் பெண்களும் பிரச்சனைகளும் – 57
தஞ்சை ந. இராமதாசு

16. குண்டாகிப் போன குடும்பத் தலைவியர் - சமுதாயப் பார்வை – 61
வை. இராமமூர்த்தி

17. பெண் கடந்து வந்த பாதை – 66
மா.பெ.இராஜன்

18. பெண்கள் கடந்து வந்த பாதையில் மருதநில மகளிர் - 69
மெ. இளங்கொடி
19. பெண்ணும் பொதுவாழ்வும் - 74
கே. உண்ணாமலை ஈஸ்வரி
20. பணிக்கு செல்லும் பெண்களின் பிரச்சனைகளும் அதற்கான தீர்வுகளும் - 78
வீ. உதயகுமரன்
21. சுகமான சுமைகள் - 83
வி. கமலா
22. வாழ நினைத்தால் வாழலாம் - 88
கலா விசு
23. பெண்களின் முன்னேற்றமும் மாற்றமும் - 96
மோ.கலைச்செல்வி
24. பெண் ஒரு அஷ்டாவதானி - 100
முனைவர் ப. கவிதா
25. பெண் கடந்து வந்த பாதை - 102
முனைவர் பெ. கவிதா
26. பணிக்குச் செல்லும் பெண்களின் பிரச்சனைகளும் அதற்கான தீர்வும் - 106
திருமதி ந. கவிதா
27. பெண்ணே! உன் பாதை? - 109
புலவர் ப.கனகரத்தினம்
28. பெண்ணின் சுகமான சுமைகள் - 113
இரா. கஸ்தூரி
29. பெண் கடந்து வந்த பாதை - 118
க.காயத்ரி
30. நான் கடந்து வந்த பாதை - 121
இரா. கௌசல்யா இராமசாமி
31. பெண் கடந்து வந்த பாதை - 127
சி. சங்கீதா
32. சுகமான சுமைகள் - 130
பி. சங்கீதா
33. பெண் கடந்து வந்த பாதை - 133
பி. சத்தியபாமா
34. சத்தியமான சபதங்களால் சாத்தியமாக்குவோம் - 137
முனைவர் மா.சதானந்தம்





35. வேலைக்கு செல்லும் பெண்களுக்கு ஏற்படும் பிரச்சினைகள் & தீர்வுகள் - 141
ரா. சரண்யா
36. பெண் கடந்து வந்த பாதை! - 145
சரஸ்வதி வைத்தியநாதன்
37. எங்கெங்கு காணினும் சக்தியடா - 151
பொன். சாமிநாதன்
38. பெண் (நான்) கடந்து வந்த பாதை - 157
தே.நே.சித்திரச்செல்வி
39. இளங்கோ கம்பர் காலத்தில் பெண்கள் கடந்து வந்த பாதை - 165
க. சித்திரா
40. நான் கண்ட புதுமைப் பெண் - 169
ஜா.சிராஜ்னிஷா
41. பெண் ஒரு அஷ்டாவதானி - 172
க. சிவரஞ்சனி
42. பெண் எனும் பேருவகை - 176
முனைவர் மெ.சிவரஞ்சனி
43. காலங்காலமாக பெண்கள் உளவியல் நோக்கு - 179
முனைவர் ந. சுதா
44. பெண் கடந்து வந்த பாதை - 182
சுமதி ராஜா
45. அரசியல் இட ஒதுக்கீட்டில் பெண்கள் - 187
சி. செந்தாமரை
46. பெண் ஒரு அஷ்டாவதானி - 192
இரா. செம்பியன்
47. பணிக்குச் செல்லும் பெண்களின் சிக்கல்களும் தீர்வுகளும் - 197
முனைவர் சி.சேமசுந்தரி
48. அரசியலில் பெண்களின் ஈடுபாடு - 201
ரா. தமிழ்ச்செல்வன்
49. எங்கெங்குக் காணினும் சக்தியடா - 205
சி. தமிழ்மணி
50. பெண்ணியத்தின் பன்முகப் பார்வை - 209
ந. தமிழ்மறை
51. பெண் கல்வியும் - பாரதியும் - 214
இரா. தனப்பிரியா

52. நினைவான கனவுகள் - 218
முனைவர் வெற்றி. திருநாவுக்கரசு
53. அரசியல் இட ஒதுக்கீட்டில் பெண்கள் - 222
இரா.திவ்யபாரதி
54. பெண் கடந்து வந்த பாதை - 226
க. தினேஷ்குமார்
55. வாழ நினைத்தால்வாழலாம் - 230
சீ. துர்க்காதேவி
56. பெண் கடந்து வந்த பாதை - 233
ஜி. தேன்மதி
57. பெண் கடந்து வந்த பாதை - 237
பழ. நந்தினி
58. பயணமே மனிதப் பண்பாடு - 240
திருமதி ப. நல்லநாயகி
59. பெண் கடந்து வந்த பாதை - 244
ம. நளினி
60. பெண் கடந்து வந்த பாதை - 248
ஜெ. நிவேதா
61. எங்கெங்கும் காண்பினும் சக்தியடா - 253
பி. பாக்யா
62. உருவு கண்டு எள்ளாமை - 258
ஸ்ரீ. பிரியதர்ஷினி
63. பெண் ஒரு அஷ்டாவதானி - 261
ஜெ. புவனேஸ்வரி
64. பெண்களும் வாழ்வியலும் - 266
முனைவர் ம.பெருமாள்
65. பெண்களின் முன்னேற்றம் - 270
ச.பொற்கொடி
66. தொட்டுவிடும் தூரம் - 274
பி.பொன் மலர் குயினி
67. பெண்கள் கடந்து வந்த பாதை - 280
பாவலர் வீ.மண்ணாங்கட்டி சக்கரபாணி
68. காலந்தோறும் மகளிர் - 284
முனைவர் க.மகேஸ்வரி
69. பாரதியார் காட்டும் பெண் விடுதலை - 289
முனைவர் இரா.க.முருகன்





70. தமிழ்ச் சமுதாயத்தில் பெண் எதிர்ப்பாடுகள் - 293
க.முருகானந்தம்
71. எங்கெங்கு காணினும் சக்தியடா - 297
ப.முருகேசன்
72. வாழ நினைத்தால் வாழலாம் - 301
ஆர். மெர்சி
73. பணியிடங்களில் பாலியல் வன்முறைகள் குறித்த விழிப்புணர்வு - 305
முனைவர் ஜெ. மேரி கரோலின்
74. அரசியலில் பெண்களின் ஈடுபாடு - 309
ம. யாழினி
75. பெண்ணின் பெருந்தக்க யாவுள - 312
முனைவர் க. யோகாம்பாள்
76. வேலைக்குச் செல்லும் பெண்களின் பிரச்சனைகளும் அதற்கான தீர்வுகளும் - 318
இரா. ரம்யா
77. பெண் கடந்து வந்த பாதை - 324
க. ரமா
78. இந்தியாவில் பெண்கள் கடந்து வந்த பாதை - 328
ஆர். ராதிகா
79. பெண்களும் பொருளாதார சுதந்திரமும் - 333
இரா. ராதிகா
80. பெண் கடந்து வந்த பாதை - 337
நா. ராஜராஜேஸ்வரி
81. பணிக்குச் செல்லும் பெண்களின் பிரச்சனைகளும் அதற்கான தீர்வும் - 341
வி.ராஜலெட்சுமி
82. சமுதாய முன்னேற்றத்தில் மகளிர் பங்கு - 346
ரா. ராஷிகா
83. பெண் கடந்து வந்த பாதை - 348
சே. ரேணுகாதேவி
84. பண்பாட்டு தளத்தில் பிள்ளை பெறவா? பெண்கள் - 354
முனைவர் ந. லெனின்
85. மகளிர் மேம்பாடு - 359
ம. வளர்மதி

86. பெண் முன்னேற்றம் - 363
என். வனிதா

87. எங்கெங்கு காணினும் சக்தியடா - 366
பி. வாணி

88. தொட்டு விடும் தூரம் - 371
இரா. வானதி

89. பெண் ஓர் அஷ்டாவதானி - 375
வே. விசாலாட்சி

90. பெண் எனும் பேராண்மை - 380
இரா. வித்யா

91. பெண் ஒரு அஷ்டாவதானி - 384
ச.சே. வித்யா

92. பெண் கடந்து வந்த பாதை - 389
ஆர். விஜயலெட்சுமி

93. பெண் கடந்து வந்த பாதை - 391
திருமதி விஜயலெட்சுமி மணிமோகன்

94. பெண் மரபுகளும் மாற்றங்களும் - 395
முனைவர் த. வீரையன்

95. சிலையும் நீயே சிற்பியும் நீயே - 398
க.வெண்ணிலா

96. சுகமான சுமைகள் - 402
ம. ஸ்டெல்லா மேரி

97. பாரதியார் படைப்புகளில் பெண்ணியம் - 405
இர. ஸ்டெல்லா ஜெயஸ்ரீ

98. பெண்களும் பொருளாதார சுதந்திரமும் - 409
செ. ஜான்சி

99. பல்துறைகளில் மகளிர் - 413
மு.ஜெயலட்சுமி

100. சுகமான சுமைகள் - 420
முனைவர் ஜெ.ஜெயஸ்ரீ

101. கலைத்துறையில் பெண்கள் - 424
ச.ஜெயசுதா

102. சங்க காலத் தமிழக மகளிர் - 428
சு. ஜெயராணி

103. பெண் கடந்து வந்த பாதை - 431
பு. ஹேமாவதி



104. பெண் கடந்து வந்த பாதை - 436
முனைவர் கீதா

105. பெண்களின் சமூக நிலைமைகள் - 441
கு. கீதா

106. Role of Women Entrepreneurs in the Economic Development of India - 444
R. Aravazhi

107. Problems Faced by Working Women in India - 449
L. Arockia Malar

108. Social Entrepreneur, Management Training Consultant - 454
K.Aruna

109. Women Empowerment Through Enterpreneurial Activity of Self Help Groups - 457
H. Bama

110. The Importance of Economic Independence for Women - 462
S. Bruntha

111. Women Empowerment in India - 467
V.Deepa

112. Review of status of women and its relation to Mental health in India - 472
Mrs.Ezhilarasi Mahadevan

113. Successful Women Entrepreneurs - 477
Mrs. Geetha Ravindran

114. Is woman a boon? - 481
Dr.R. Gowthami

115. Marital Violence and Women's Employment and Property Status : Evidence from North Indian Villages - 484
P. Kanimozhi

116. Women's Economic Empowerment - 488
R. Kavitha

117. Women is a Multifaced Person - 493
Mrs. Kayalvizhi Tamilarasan

118. Multi-Personality of women - 498
Mrs.R.Kiruthiga

119. The status of women empowerment in India - 501
S.Krishnavalli

120. Women's role in economic development in India - 506
P. Kumarasamy

121. Important constitutional and legal provisions for women in India - 511
R. Malini

122. Women's economic indep?ndence in India - 516
S. Manoj

123. A Study of School Women Teachers Stress and Its Effection Their Job Performance in Thanjavur District - 521
M. Marimuthu

124. Status and Progress of Indian Women - 526
A. Nafees Sulthana

125. Women in Politics - 531
K. Narmatha

126. Women is a Multidimensionalist - 536
S. Pratheeba

127. Problems of Working Women & Solutions - 539
U. Pradeepa

128. Article on women's empowerment - 541
J.Rethinaselvi

129. Problems and Challenges Faced by Urban Working Women in India - 546
R. Saranya

130. The Effectiveness of Women Entrepreneurship Training Program: A Case Study - 551
Shanthi Noble

131. The Hazards of a woman in the transition - 555
Sharmila Meston Vinodh

132. Women Empowerment - 559
Shiny Ravi

133. Problems Faced by Women - 564
P. Suba

134. Family stress situation among the working and non-working married women in Thanjavur - 569
Mrs.V.R.Subhiksha

135. Economical Empowerment of women - 574
R. Sumithra

136. Roles, Responsibilities, and Trends of NGOs in Women Empowerment - 579
Dr. Thomas Alwa Edision

137. Women's role in economic development : Overcoming the Constraints - 585
S. Vinotha




# பெண் கடந்து வந்த பாதை


அ. அசோக்குமார்

இரண்டாம் ஆண்டு, வணிகவியல் துறை,

பாரத் கல்லூரி, தஞ்சாவூர்.


## பெண் சமுதாயத்தின் கலங்கரை விளக்கம்

வழிகாட்டும் ஒளிவிளக்கு, மாதராய் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டும் என்ற கவிஞனின் கூற்றுக்கேற்ப பெண்களை நமது சமூகம் போற்றிட வேண்டும். இந்த பெண் சமுதாயம் கடந்து வந்த தடைகளையும், வளர்ச்சிகளையும் காண்போம்.

18, 19-ஆம் நூற்றாண்டு தொடக்கத்தில் அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பு எதற்கு என கூறி பெரியவர்கள் பெண்களின் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை.

பால்ய விவாகம் என்ற பெயரில் சிறுமிக்கு முப்பது மற்றும் நாற்பது வயது ஆண்மகனை திருமணம் செய்து வைத்தார்கள். திருமணம் இல்லறம் என்றால் என்னவென்றே தெரியாத மனநிலையில் இருந்த சிறுமியை திருமணம் என்ற கிணற்றில் தள்ளினார்கள்.

அடுத்ததாகக் கணவன் இறந்தால் மனைவியும், உடன்கட்டை ஏறுதல் என்ற பெயரில் தீயில் வீழ்ந்து இறந்துவிட வேண்டும். சதி எனப்படும் இந்த அக்கிரமம் ராஜஸ்தான் மாநிலத்தில் ராஜபுத்திர வம்சத்தில் இன்றளவும் சில கிராமங்களில் நடந்து கொண்டு இருக்கிறது. அப்போது கவிஞர் பாரதியார் பெண்ணடிமை பற்றியும் புதுமைப் பெண்கள் என்ற பெயரிலும் கவிதைகள் இயற்றியும் பெண்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

**பருவே முகமாகி போனது போல**
**தொழுநோயே தேகமாகி போனது போல**
**தேசமே பெண்ணடிமை தனத்தால் மூழ்கி கிடந்தது.**

அப்போது தான் ஈரோடு தந்த சிங்கம், பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் தனது திராவிடர்கழகம் இயக்கத்தின் மூலம் பெண் கல்வி, பால்ய விவாகதடை, விதவை திருமணம், சீர்திருத்த திருமணம் ஆகியவற்றைத் தீவிரமாக வலியுறுத்தி கருத்துக்களைக் கூறினார்.

# பெண் ஒரு அஷ்டாவதானி

இரா. செம்பியன்
வெப் டிசைனர், காட்சித் தொடர்பியல் துறை,
பாரத் கல்லூரி, தஞ்சாவூர்.

சுயம்பு என்றால் யாராலும் உருவாக்கப்படாமல் தானே உலகில் அவதரிப்பது. பெண்ணும் அப்படியே. ஆகவே அவள் அஷ்டாவதானியாக இருப்பதில் எள்ளளவும் ஐயப்பாடு இல்லை. அஷ்டாவதானி என்றால் பல்வேறு திறமைகளை தன்னிடத்திலே கொண்டவர் என்ற பொருள். அப்படி பெண் தான் ஈடுபடும் எந்தக் காரியத்திலும் வெற்றிகொள்கிறாள். வெற்றிபெறச் செய்கிறாள். ஆனால் அவள் ஈடுபடும் ஒவ்வொரு காரியமும் அதற்கு முன்பு அதில் அவள் பரிட்சயம் பெறாத காரியமாகவே இருக்கிறது. ஆனால் அதை திறம்பட செய்து முடிக்கிறாள். அப்படி நாம் பட்டியலிட்டால் வீட்டிலே ஒரே பெண் பிள்ளையாகப் பிறந்து செல்லமாக வளர்க்கப்பட்டு பல்வேறு துறைகளிலே படிக்கவைக்கப்பட்டு வேலையிலும் சேரச்செய்து பின்னர் திருமணம் முடிக்கிற சமயத்தில் அவளுக்கு சமையல் கலையிலே பரிட்சயம் இல்லாமல் தான் மறுவீடு செல்கிறாள். ஆனால் எப்படியோ சமைத்து அங்குள்ளவர்கள் வியக்கும் வண்ணம் உபசரிக்கிறாள். சமையலில் சிறந்தவள் என்ற பெயரையும் பெறுகிறாள். இவ்வாறு எல்லா துறைகளிலும் சிறந்து விளங்கும் பெண் ஒரு அஷ்டாவதானி என்பதை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பெண் படிக்கச் செல்வதென்றாலே பல தடைகளைத் தாண்டியே இப்போதும் செல்லும் நிலை இருக்கிறது. இக்காலத்திலும் ஒவ்வொரு வீட்டிலும் பெண் பள்ளிக்குச் செல்வதைத் தடுக்க முயற்சி செய்பவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். அதுமுதலே தடைகளை சமாளித்து தான் படிக்கவேண்டும் என்று நினைத்ததை சாதிக்கிறார்கள். அதற்கென்று அவளுக்கு யாரும் பயிற்சி கொடுப்பதில்லை. அவளே அதை முடிவு செய்கிறாள் நிறைவேற்றுகிறாள். அவளுக்கு ஏற்படும் இயற்கை உபாதைகளை சமாளிக்க தானே போராடுகிறாள். பல சமயங்களில் யாரிடமும் சந்தேகமோ யோசனையோ கேட்கமுடியாத சூழ்நிலையிலும் தானே தீர்வைப் பெறுகிறாள். ஒரு பெண் வளர்ந்து திருமணமாகி மறுவீடு செல்கிறாள். எங்கிருந்தோ வந்த ஒரு ஆண் திடீரென்று அவளுக்குத் துணையாகிறான். அவன் எப்படிப்பட்டவன் என்று என்னதான் வீட்டிலுள்ளவர்கள் விசாரித்து ஆலோசனை செய்து திருமணம் செய்துவைத்தாலும் அந்த ஆணின்



உண்மைத் தன்மை யாருக்கும் விளங்குவது சாத்தியமில்லை. அப்படி இருக்கும்போது ஒரு பெண் தன் மன தைரியத்தின் துணையோடு தான் அந்த ஆணுக்கு மனைவியாகிறாள். அந்தக் குடும்பத்தில் விளக்கேற்றி வைக்கிறாள். குடும்பம் தழைத்தோங்கச் செய்கிறாள். அந்தத் திறமையை அவள் யாரிடமிருந்தும் பெறவில்லை. அது அவளுக்குள்ளே இருக்கிறது.

குழந்தைப்பேறு என்பது மறுவாழ்வு என்பது எல்லோரும் அறிந்ததே. அது எப்படி இருக்கும் என்று எந்தப் பெண்ணாவது திருமணத்திற்கு முன் தெரிந்திருக்கிறாளா? அதை எப்படி சமாளிப்பது என்று யாராவது அவளுக்கு உணர்த்த முடியுமா? மனித குலம் தழைக்க பல்வேறு இன்னல்களை வெளியில் காட்டிக்கொள்ளாமல் மரணத்தின் விளிம்பிற்கு சென்று ஒரு உயிரை இந்த உலகிற்கு அளிக்கிறாள். ஒவ்வொரு குழந்தையும் ஒவ்வொரு விதமான தனித்தன்மை வாய்ந்ததாகப் பிறக்கிறது. அதை இப்படித்தான் சமாளிக்க வேண்டும் என்பது யாருக்கும் தெரியாது. ஆனால் பெற்றத் தாய் அக்குழந்தையை அவரவர்களுக்கென்று உள்ள தனித்திறமையைக் கொண்டு ஆளாக்குகிறாள். ஒரு தாயின் கல்வியோ, கல்வி இல்லாமையோ ஒரு குழந்தையின் வளர்ச்சியைத் தடுப்பதில்லை. ஒவ்வொரு தாயின் தனித்தன்மையும், முயற்சியுமே குழந்தை வளர்ப்பில் வெற்றியைத் தருகிறது. மேலும் ஒரு தாய்தான் ஒரு குழந்தையை நல்ல நிலைக்கு கொண்டு செல்ல முடியும் என்பதில்லை. அதில் ஈடுபடுகிற பெண்ணின் திறமையைப் பொறுத்தே அது அமைகிறது. உதாரணத்திற்கு சொல்லவேண்டுமானால் பேரறிஞர் அண்ணா காஞ்சிபுரத்தில் நடராசன் – பங்காரு அம்மையாருக்கு மகனாகப் பிறந்தார். ஆனால் அவர் அவரால் தொத்தா என்றழைக்கப்பட்ட தன் சிற்றன்னை ராஜாமணி அம்மையாரால் தான் வளர்க்கப்பட்டார். தொத்தா படித்தவர் இல்லை. ஆனால் அண்ணாவைப் படிக்கவைப்பதில் அதிகக் கவனம் செலுத்தி அவர் ஒரு மேதையாகக் காரணமாக இருந்தார். பல சமயங்களில் அண்ணா ஆங்கிலப் பாடம் படித்துக் கொண்டிருக்கிற சமயத்தில் அதைத் தன்னிடம் ஒப்பிக்கும் படி கேட்பாராம் தொத்தா. அண்ணாவும் அப்படியே ஒப்பிப்பாராம். அதற்கு தொத்தா ஒப்பித்தது சரியில்லை மறுபடியும் சொல் என்று கேட்பாராம். அண்ணா படிக்க வேண்டும் என்பதற்காக இரவு பகல் பாராமல் தன்னிடம் இருக்கும் திறமைகளைக் கொண்டு உழைத்து நமக்கு மிகப்பெரிய தலைவரை வளர்த்தளித்தது தொத்தாவான ஒரு பெண்.

பெண்குலத்தில் சிறந்த பெண்மணிகளில் ஒருவராக கருதப்படுபவர் மதிப்பிற்குரிய கஸ்தூரிபாய் காந்தி அவர்கள். அவர் மகாத்மா காந்தியை

திருமணம் செய்து கொண்ட பிறகு காந்தி வழக்குரைஞராகப் பணியாற்றியபோதும், நாட்டு விடுதலைக்காகப் பாடுபட்டபோதும் உற்றத் துணையாக இருந்து அவரின் வெற்றிக்கு பல்வேறு இன்னல்களையும் பொருட்படுத்தாமல் உழைத்த உத்தமியாவார். விடுதலைப் போராட்டத்தில் காந்தியடிகளோடு சிறைக்கு சென்றவர். காந்தியடிகள் தான் பெண்களை விடுதலைப் போராட்டங்களில் பெரிதும் ஈடுபடச் செய்தவர். அப்படி ஈடுபட்டு அவரோடு செல்கிற சமயங்களில் காந்தியின் மகன்களில் ஒருவரான ஹரிலால் காந்தி தன் அம்மாவிடம் இவரோடு போகாதே, இப்படியே உன்னை சாகடித்துவிடுவார் என்பாராம். அவர்கள் பயணம் போகின்றபோது பழங்களை வாங்க அம்மாவிடம் கொடுத்துவிட்டு இவருக்குக் கொடுக்காதே நீதான் சாப்பிடவேண்டும் என்பாராம். ஆனால் காந்தியடிகள் நடத்தும் போராட்டங்களில் ஹரிலாலும் கலந்துகொள்வார் என்பது வேறு விஷயம். அப்படிப்பட்ட தருணங்களில் தான் கஸ்தூரிபாய் காந்தி சிறையில் இருந்தபோது அவரது உயிர் பிரிய நேரிட்டது. சிறைச்சாலையிலேயே தன் மனைவிக்கு காந்தியடிகள் இறுதிச் சடங்குகள் செய்தார். ஒரு பெண் என்பதால் தான் இவ்வளவு இன்னல்களையும் சமாளித்து இந்த உலகில் சாதிக்க முடிந்தது.

பெண் கல்வி கற்கும் போதும் சரி, ஒரு நிர்வாகத்தில் இருக்கும் பொழுதும் சரி, மிகத் திறமையாக செயல்படுகிறார்கள். பல்வேறு துறைகளில் பெண்களை பணியில் அமர்த்துவதற்குக் காரணமே இதுதான். அவர்கள் ஈடுபடும் துறையில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்கிறார்கள். அதற்காக தங்களின் நேரத்தை சரியாக வடிவமைத்துக் கொள்கிறார்கள். பணிக்குச் செல்லும் பெண்கள், திருமணமானவர்களானாலும், ஆகாதவர்களானாலும் அவரவர்களுக்கென்று உள்ள பல்வேறு வேலைகளுக்கிடையில் பணிக்கு செல்வதற்கான நேரத்தை கச்சிதமாக கடைபிடிக்கிறார்கள். இது பெண்களால் மட்டுமே சாத்தியமாகிறது. மேலும் இல்லத்தரசிகள் குழந்தை வளர்ப்பிலும் சரி கணவனுக்குத் துணையாக செயல்படுதிலும் சரி தன் சிரமங்களைப் பொருட்படுத்தாது எடுத்தக் காரியத்தை மட்டுமே கருத்தில் கொண்டு அதற்குத் தன்னை அர்ப்பணிக்கிறார்கள்.

படித்து விட்டு பணிக்குதான் செல்லவேண்டும் என்றில்லாமல் தன் குடும்பத்தை வழிநடத்தவும், நல்ல நிலைக்குக் கொண்டுவரவும், பெண்கள் பாடுபடுகிறார்கள். திருச்சி ஸ்ரீரங்கத்தில் உள்ள முனைவர் திருமதி.பிரேமா நந்தகுமார் அவர்கள் சிறந்த படிப்பாளி மட்டுமல்ல படைப்பாளியும் கூட அவர்கள்



அங்கே ஒரு சங்கம் அமைத்து அதில் பல்வேறு படிப்பாளிகளைக் கொண்டு மாதந்தோறும் அவரவர்கள் படித்தப் புத்தகங்களைப் பற்றிப் பேசும் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்கிறார்கள். பல இடங்களுக்குச் சென்று அறிவுச் சொற்பொழிவுகள் நிகழ்த்தி வருகிறார்கள். கல்லூரிகளுக்கு சென்று மாணவர்களுக்கு சிறப்பு வகுப்புகள் எடுத்துவருகிறார்கள். அவருக்கு ஒரு முறை ஜனாதிபதி விருது வழங்கப்பட்டது. அவ்விருது வழங்குகிற நேரத்தில் ஜனாதிபதி அவர்கள் திருமதி.பிரேமா நந்தகுமாரிடம் நீங்கள் இப்போது என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள் என்று கேட்டபோது, நான் தளிகை (சமையல்) பண்ணிக்கொண்டிருக்கிறேன் என்றாராம். அதாவது வீட்டில் கணவனுக்கும் குழந்தைகளுக்கும் பணிவிடைகள் செய்து கொண்டிருக்கிறேன் என்றாராம்.

ஒருமுறை நாடாளுமன்ற உறுப்பினர் திருச்சி என்.சிவா அவர்கள் தன் மனைவி இறந்த பிறகு தன் மனைவியைப் பற்றி ஒரு கூட்டத்தில் பேசும் போது இப்படிப் பேசினார். வாழ்வின் எல்லா நிலைகளிலும், வசந்தம் எட்டிப் பார்க்காத ஆரம்ப காலத்திலும், வளம் குறைந்திருந்த நாட்களிலும் மகிழ்ச்சியோடு என்னோடு வாழ்ந்தவள் அவள். பொன் நகைகளை கழட்டிக் கொடுத்துவிட்டு, புன்னகையோடு மட்டும் வலம் வந்த நாட்கள் உண்டு. அரசியல் வெப்பம் தகித்தபோது, தனிமனித வாழ்வின் துன்பங்கள் சூழ்ந்தபோது, என் அருகே ஆறுதலாய், ஆதரவாய் இருந்தவள். எந்த நிலையிலும் தலை தாழ்ந்து வாழ்ந்திடக் கூடாது என்கின்ற என் குணத்திற்கு இயைந்து இணைந்து நடந்தவள். சுயமரியாதையை காப்பதில் என்னையும் தாண்டி நின்றவள். மூன்று குழந்தைகளும் பிறந்த நேரத்தில் இடைத்தேர்தல் பணி, பிரச்சாரப்பணி, போராட்டங்கள் என்று அவள் அருகே இருக்காமல் சுற்றிக்கொண்டிருந்த போது சிறிதும் முகம் சுழிக்காதவள். 1982 ஆம் ஆண்டு செப்டம்பர் 15 ஆம் நாள் முரசொலியின் என் கண்கள் உன்னை தேடுகின்றன என்று கலைஞர் எழுதிய கடிதம் உங்களுக்காகவே என சொல்லி நிறைமாத கர்ப்பிணியாக இருந்தும் என்னை பெரியகுளம் இடைத்தேர்தலுக்கு அனுப்பிவிட்டு செப்டம்பர் 17 ஆம் நாள் குழந்தை பிறந்து இரண்டு நாட்கள் கடந்து 19 ஆம் நாள் நான் பார்க்க வந்தபோது ஒரு சிறிதும் முகம் சுழிக்காமல் ஒரு மணி நேரத்திலேயே என்னை மீண்டும் தேர்தல் களம் அனுப்பிவைத்த கற்பனை செய்ய முடியாத குணம் கொண்ட குலமகள். இரண்டாவது குழந்தை பிறந்து மருத்துவமனையில் இருந்து நேராக, அப்போது ஒரு போராட்டத்தில் கலந்து கொண்டு காவல் நிலையத்தில் காவலில் இருந்த இடத்திற்கு வந்து பிள்ளையைக் காட்டிவிட்டு, பத்திரமாக இருங்கள் என்று

சொல்லிவிட்டுப் போன இலட்சியவாதியான சரியான துணை. தாய் போன துயரம் தெரியாமல், தாயின் இடத்தையும் நிரப்பி, ஒருபொழுதும் எதன் பொருட்டும் முகம் வாடுவது பொறுக்காமல் துடிக்கும் உள்ளம் கொண்ட உத்தமி. பொது வாழ்க்கையில் நான் நெறி பிறழாமல் நடப்பதற்குப் பெரிதும் துணையாய், ஊக்கமாய், பக்கபலமாய் இருந்தவள். இப்படிப் பல பேரின் வாழ்க்கையை செம்மைப்படுத்துகிற அதிசயப் பிறவிகள் பெண்கள். பெண் ஒரு அஷ்டாவதானி என்று தெரிந்ததால் தான் மகாகவி பாரதியார் அவர் காலத்தில் இருந்தப் பெண்களின் நிலையைக் கண்டு வெகுண்டு

மாதர் தம்மை யிழிவுசெய்யு மடமையைக் கொளுத்து வோம்
வைய வாழ்வு தன்னிலெந்த வகையிலும் நமக்குள்ளே
தாத் ரென்ற நிலைமைமாறி யாண்களோடு பெண்களும்
சரி, நிகர், சமான மாக வாழ்வ மிந்த நாட்டி லே

என்றும்

ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்
றெண்ணி யிருந்தவர் மாய்ந்து விட்டார்.
வீட்டுக்குள் ளேபெண்ணைப் பூட்டிவைப் போமென்ற
விந்தை மனிதர் தலைகவிழ்ந்தார்

மாட்டை யடித்து வசக்கித் தொழுவினில்
மாட்டும் வழக்கத்தைக் கொண்டுவந்தே
வீட்டினி லெம்மிடங் காட்டவந்த தாரதை
வெட்டிவிட டோமென்று கும்மியடி.

என்றும் பாடினார். அவர் யோகி, ரிஷி, உலக மக்களை உய்விக்க வந்த மகாகவி. ஆகவேதான் அவர் வாக்குகள் இப்போது பலித்திருக்கின்றன.

இதேபோல பல்வேறு அறிஞர்களும் தலைவர்களும் பெண் ஒரு அஷ்டாவதானி என்பதைத் தெரிந்திருந்ததால் தான் அவர்களது விடுதலைக்கு அரும்பாடுபட்டார்கள். அவர்கள் பட்டப்பாட்டிற்கு நல்லப் பலன் கிடைத்துவருகிறது. அதன் விளைவாகவே பெண்கள் உலகில் பிரகாசிக்கிறார்கள். அவர்கள் ஈடுபட்டத் துறைகளில் சிறந்து விளங்குபவர்களின் பட்டியல் தயாரித்தால் அது நீண்டுகொண்டே போகும். அந்த அளவுக்கு அவர்கள் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கிறார்கள். பெண் ஒரு சுயம்பு என்பதால் அவள் அஷ்டாவதானியாக திகழ்கிறாள். அவை அனைத்தையும் விளக்க எண்ணிலடங்கா நூல்கள் எழுதவேண்டும்.

# பணிக்குச் செல்லும் பெண்களின் சிக்கல்களும் தீர்வுகளும்

முனைவர் சி.சேமசுந்தரி.
உதவிப் பேராசிரியர், அகராதியியல் துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

இலக்கியம் வாழ்க்கையைப் பிரதிபலிக்கின்றது என்பர். பிற்காலத்து எழுந்த அற இலக்கியங்கள் மனிதனின் வாழ்வியலைச் செம்மைப்படுத்தும் உயரிய படைப்புகளாகும். பெண்களின் வாழ்வியலில் பல்வேறு இன்ப துன்பங்கள் காணப்படுகின்றன. படித்த பெண்களும் கல்வியறிவில்லாத பெண்களும் பல்வேறு துன்பங்களை ஒவ்வொரு நாளும் அடைந்து வருகின்றனர். வீட்டில் உள்ள பெண்கள் பல்வேறு துன்பங்கள் அடைந்தாலும் மீண்டு வருதல், பொறுமையுடன் தன்னைத்தானே கட்டுப்படுத்திக்கொண்டு வாழ்கின்றனர். ஆனால் பணிக்குச் செல்லும் பெண்கள் பல மடங்கு துன்பங்களை அனுபவிக்கின்றனர்.

## பெண்ணிய விளக்கம்

பெண் என்னும் சொல் பெண்மைக்குரிய பண்புகளை உடையவள் என்று பொருள்படும். பெண்மை மானுடத்தின் ஒரு கூறு. 'பெண் தன்மை மாட்சிமை' எனச் சதுரகராதி குறிப்பிடுகின்றது. ஆங்கிலத்தில் (Feminism) என்ற சொல் பெண்கள் பற்றிய அறிவுத்துறை சார்ந்த ஒரு சமூக அறிவியல் ஆகும். இச்சொல் தமிழில் பெண்ணியம் என வழங்கப்படுகிறது.

அரசு அலுவலகங்கள் தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் பெண்கள் உயர்மட்ட நிலையிலும் அன்றாடப் பணி செய்யும் நிலையிலும் மகளிர் ஆங்காங்கே இன்னல்களுக்கு ஆளாகின்றனர். இவ்வின்னல் களுக்குத் தீர்வு காணும் நிலையையும் எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## இரட்டைப்பணி

இருவரும் வேலைக்குச் செல்லும்பொழுது குழந்தையை யார் பார்த்துக்கொள்வது என்பது ஒரு சிக்கல். உயர்ந்த பதவிகளில் வகிப்பது மிகக் குறைந்த பெண்களே உள்ளனர். சகபணியாளருடன் பேசினால் சந்தேகக் கண்கொண்டு பார்த்தல் எந்த உயர்நிலைக்கும் பாராட்டுக்கும் புகழுக்கும் அவர்கள்